செய்திவெளியீடு எண்:353 நாள்: 6.7.2009

## பத்திரிக்கை செய்தி

தொடக்கக் கல்வித்துறையில் உள்ள தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் காலியாக உள்ள இடைநிலை ஆசிரியர் பணியிடங்களுக்கு, மாநில வேலைவாய்ப்பு பதிவு மூப்பு அடிப்படையில் ஆசிரியர் தேர்வு வாரியத்தால் தேர்ந்தெடுக்கப்பட்ட 5577 இடைநிலை ஆசிரியர்களின் பெயர்ப்பட்டியல் இத்துறைக்கு பெறப்பட்டுள்ளது. இவர்களில் 1683 பேர் ஆண்கள் மற்றும் 3894 பேர் பெண்கள் ஆவர்.

### மொழிவழி வாரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் விவரம்

| மொழிவழி | தேர்வு செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை |
|---|---|
| தமிழ்வழி | 5442 |
| தெலுங்குவழி | 90 |
| உருதுவழி | 16 |
| மலையாளவழி | 13 |
| கன்னடவழி | 16 |
| **மொத்தம்** | **5577** |

**மாண்புமிகு துணை முதல்வர் அவர்கள் 08-07-2009 அன்று தலைமைச் செயலகத்தில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு பணிநியமன ஆணையினை வழங்கி கலந்தாய்வினை துவக்கி வைத்திட அன்புடன் இசைந்துள்ளார்கள்.**

அதனைத் தொடர்ந்து, அனைத்து ஆசிரியர்களுக்கும் கீழ்க்கண்டவாறு பணியிட ஒதுக்கீடு கலந்தாய்வு நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட

ஆசிரியர்களின் சிரமத்தை கருத்தில் கொண்டு அவர்களின் இருப்பிட முகவரியை அடிப்படையாகக் கொண்டு கீழ்க்கண்டவாறு கலந்தாய்வு நடத்தப்படும்.

| **தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்களின் இருப்பிட மாவட்டங்கள்** | **கலந்தாய்வு நடைபெறும் இடம்** | **கலந்தாய்வு நடைபெறும் நாள்** |
|---|---|---|
| சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம் | லேடி வெலிங்டன் மேல்நிலைப் பள்ளி, திருவல்லிக்கேனி, சென்னை–5 | 09–07–2009 |
| வேலூர், திருவண்ணாமலை ,விழுப்புரம், கடலூர், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர், பெரம்பலூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி, சேலம், நாமக்கல், ஈரோடு, திருச்சி, கரூர், புதுக்கோட்டை, சிவகங்கை, இராமநாதபுரம், திண்டுக்கல். | அந்தந்த மாவட்ட தலைமையிடம் | 09–07–2009 |
| கோவை, நீலகிரி | கோவை மாவட்ட தலைமையிடம் | 09–07–2009 |
| கன்னியாகுமரி, தூத்துக்குடி, திருநெல்வேலி, விருதுநகர், மதுரை, தேனி | பிஷப்ஹீபர் மேல்நிலைப் பள்ளி, திருச்சி, தெப்பக்குளம், திருச்சி | 10–07–2009 முதல் 14–07–2009 |

பணியிட ஒதுக்கீடு பெற்ற ஆசிரியர்களுக்கு அவர்கள் பணிபுரிய உள்ள மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்களால் அந்தந்த மாவட்டத் தலைமையிடத்தில் **15–07–2009** அன்று பணிநியமன ஆணை வழங்கப்பட்டு, அன்றே பணியேற்க நடவடிக்கை எடுக்கப்படும்.

* * * * *

**வெளியீடு:இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**